கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிதம்பரம்

**OS No.62/2018**

The Oaths Act 1969 (Act.44/1969)-ன் விதிமுறைகளின் படி 10.02.2026 நாளாகிய இன்று கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி திருமதி.E.Swetha, B.B.A., L.L.B.(Hons), அவர்களால் சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| தேதி | 10.02.2026 | சாட்சி | பி.வா.சா.1 |
| பெயர் | முத்துலட்சுமி | வயது | 55 |
| கணவர் பெயர் | சுந்தரமூர்த்தி | கிராமம் | மஞ்சக்கொல்லை |

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி** :

6. எனது சொத்திற்கும் வடக்கே விருத்தாசலத்தில் இருந்து பரங்கிபேட்டை செல்வதற்கான மாநில நெடுஞ்சாலை அமைந்துள்ளது என்றால் சரிதான். அந்த மாநில நெடுஞ்சாலையில் இருந்து அருகாமையில் வாண்டையாங்குப்பம் கிராம சாலை அமைந்துள்ளது என்றால் சரிதான். வாண்டையாங்குப்பம் சாலை கிழக்கில் குணமூர்த்தியின் இடமானது அமைந்துள்ளது என்றால் சரிதான். குணமூர்த்தியின் இடத்திற்கு கிழக்கே முருகனின் இடம் அமைந்துள்ளது என்றால் சரியல்ல. எங்கள் இடம் தான் அமைந்துள்ளது. அந்த இடத்திற்கான புல எண் தெரியுமா என்றால் தெரியாது.

7. அம்சவள்ளி கணவர் சுப்பிரமணிக்கு தாவா சொத்தில் அமைந்துள்ள கிராமத்தில் நிலங்கள் உள்ளதா என்றால் உள்ளது எங்கள் மனைக்கு 4 மனைகள் தாண்டி அமைந்திருந்தது. அதை அவர்கள் கிரையம் கொடுத்துவிட்டார்கள். எங்கள் இடத்திற்கு தெற்கே சின்னதம்பியின் இடம் மற்றும் மேற்கே செல்வத்தின் இடம் அமைந்துள்ளது என்றால் சரிதான். செல்வத்திற்கு பாத்தியமான இடத்தை தான் வாதியின் கணவரான முருகன் கிரையம் வாங்கியுள்ளார் என்றால் சரிதான். 4 செண்ட்யை வாங்கினார். அந்த 4 செண்டிற்கு வடக்கே தான் விருத்தாசலத்தில் இருந்து பரங்கிபேட்டை செல்வதற்கான மாநில நெடுஞ்சாலை அமைந்துள்ளது

என்றால் 4 மனைக்கு அடுத்து தான் நெடுஞ்சாலை அமைந்துள்ளது.

8. செல்வம் மனைக்கும் மேற்கே குணமூர்த்தியின் மனை உள்ளதா என்றால் சரியல்ல வடக்கே அமைந்துள்ளது. முருகன் வீடு கட்டியிருக்கும் பின்புறம் கிழக்கே கழிப்பறை அமைந்துள்ளது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள அசல் வழக்கு எண்.168/2010 ன் உள்ள மூல ஆவணம் சொத்தின் தேதி தெரியுமா என்றால் ஞாபகமில்லை. அந்த வழக்கு சொத்தை யார் யாரிடமிருந்து வாங்கினார் என்றால் நான் மாணிக்கப்படையாட்சி இடமிருந்து வாங்கினேன். அதற்கான ஆவணம் என்னிடம் உள்ளதா என்றால் உள்ளது. அவ்வாறு நான் மாணிக்கப்படையாட்சி இருந்து நான் சொத்தை வாங்கியதாக எனது பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மாணிக்கப்படையாட்சியிடம் இருந்து கிரையம் வாங்கிய ஆவணத்தை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் தாக்கல் செய்துள்ளேன். மாணிக்கப்படையாட்சியிடம் இருந்து கிரையம் வாங்கிய தேதியை எனது பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை என்றாலும் இவ்வழக்கில் அந்த ஆவணத்தை நான் செய்யவில்லை என்றாலும் சரியல்ல.

9. செல்வத்தின் இடமிருந்து முருகன் வாங்கிய சொத்தை பற்றி விவரம் எனக்கு அசல் வழக்கு எண்.168/2010 ஐ தாக்கல் செய்யும் போதே தெரியும் என்றால் சரியல்ல. அசல் வழக்கு எண்.168/2010 ல் முருகனோ அவரது மனைவி மாலதியோ தரப்பினர் இல்லை என்றால் சரிதான். அம்சவள்ளி கணவர் சுப்பிரமணியனும் அந்த அசல் வழக்கு எண்.168/2010 ல் தரப்பினர் இல்லை என்றால் சரிதான். அசல் வழக்கு எண்.168/2010 தாக்கல் செய்வதற்கு முன்பே சுப்பிரமணியன் கிரையம் வாங்கி வழக்கு சொத்தை அனுபவித்து வந்தார் என்றால் சரிதான். அந்த அசல் வழக்கு எண்.168/2010 தாக்கல் செய்ய போதே அந்த வழக்கு சொத்திற்கான பட்டா எனது பெயரில் இருந்தது என்றால் சரிதான். அந்த பட்டாவில் அப்போதே உட்பிரிவு செய்யப்பட்டிருந்தது என்றால் சரிதான்.

10. என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.2 ல் புல எண். 189/3 புதிய உட்பிரிவு செய்யப்பட்டதாக குறிப்பிடவில்லை என்றால் எனக்கு புரியவில்லை நான் 3 ம் வகுப்பு வரை தான் படித்துள்ள காரணத்தினால் அவ்வளவு எழுத படிக்க தெரியாது. எனது பெயரில் உள்ள பட்டா எண் என்னவென்றால் 189/3. பட்டா உட்பிரிவு செய்யப்பட்டுள்ளதாக சாட்சியம் அளித்த நிலையில் உட்பிரிவு செய்யப்பட்ட எண்கள் பற்றி விவரம் தெரியுமா என்றால் தெரியாது.

11. என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.4 ஆன நிறைவேற்று மனுவிலும் முருகன், மாலதி மற்றும் சுப்பிரமணியன் தரப்பினர்கள் இல்லை என்றால் ஞாபகமில்லை. நிறைவேற்று மனு தாக்கல் செய்து ஒப்புதல் எடுத்த சமயத்தில் போது பிரேம்குமார், மேரி, வள்ளுவதாசு, பீட்டர் ஆகியோர்கள் தான் அங்கு இருந்தார்கள் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்திருக்கும் பி.வா.சா.ஆ.4 கும் அசல் வழக்கான 168/2010 கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரிதான். அசல் வழக்கான எண்.168/2010 தீர்ப்புரையோ தீர்ப்பாணையோ இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.5 ல் 17.04.1987 தேதியிட்ட வரி ரசீதில் பட்டா எண்.545 மற்றும் 494 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 27.06.1989 தேதியிட்ட வரி ரசீதில் பட்டா எண்.545 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

12. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.5 மற்றும் பி.வா.சா.ஆ.6 க்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கு சொத்து வாதிக்கு பாத்தியம் என்றாலும் எனக்கு அதில் உரிமையோ அல்லது பாத்தியமோ இல்லை என்றாலும் சரியல்ல. வேறு சொத்திற்கு வழக்கு தொடுத்து தீர்ப்பாணை பெற்று கொண்டு இவ்வழக்கில் எனக்கு சம்மந்தம் இல்லாத வாதியின் இடத்திற்கு இடையூறு செய்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்திற்கும் எனக்கு சம்மந்தம் இல்லாத காரணத்தினால் தான் அசல் வழக்கு எண்.168/2010 மற்றும் நிறைவேற்று மனுவிலும் வாதியோ அல்லது சுப்பிரமணியனோ தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சரியல்ல.

**சாட்சி விசாரணை முடிவுற்றது. மறு விசாரணை இல்லை.**

Typed to my dictation in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

(Sd/- E.Swetha)
Additional District Munsif
Chidambaram